■ கியூபா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடையை கண்டித்து, அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகம் சார்பில் ராஜா தியேட்டர் சந்திப்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

■ புதுச்சேரி கடற்கரை சாலை நேரு சிலை அருகில் நடந்த கொரோனா விழிப்புணர்வு நிகழ்ச்சியை அமைச்சர் லட்சுமி நாராயணன் துவக்கி வைத்து பேசினார். அருகில் அரபிந்தோ சொசைட்டி விஜய்பொதார்.

நாளைய மின்தடை

காலை 9:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை

நல்லாத்தூர் துணை மின் நிலையம் : நல்லாத்தூர், செல்லஞ்சேரி, கீழ்குமாரமங்கலம், நல்லவாடு, காட்டுப்பாளையம், ராசாப்பாளையம், தென்னம் பாக்கம், சந்திக்குப்பம், ரெட்டிச்சாவடி, காரணப்பட்டு, புதுக்கடை, புது பூஞ்சோலை, மதலப்பட்டு, இருசாம்பாளையம், கிளிஞ்சிக் குப்பம், புதுக்குப்பம், தூக்கணாம்பாக்கம்.

ஆர்ப்பாட்டம்

புதுச்சேரி, ஜூலை 27–

கியூபா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடையை கண்டித்து, அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

கியூபா நாட்டின் மீது அமெரிக்க அரசு பொருளாதார தடை விதித்துள்ளது. இதனால் கொரோனா தொற்று காலத்தில், உணவு, மருந்து மற்றும் தடுப்பூசி மூலப்பொருள் இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதைக் கண்டித்து, அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. முன்னாள் எம்.எல்.ஏ., நாரா கலைநாதன் தலைமை தாங்கினார். இந்திய கம்யூ., மாநில செயலாளர் சலீம், மார்க்சிஸ்ட் கம்யூ., செயலாளர் ராஜாங்கம், அப்துல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கடற்கரையில் கொரோனா விழிப்புணர்வு

புதுச்சேரி, ஜூலை 27–

புதுச்சேரி கடற்கரையில் கொரோனா விழிப்புணர்வு நாடகம் நடந்தது.

புதுச்சேரியில் கொரோனாபரவல்தொடர்பாக, சுகாதாரத் துறை மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து, விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். அரபிந்தோ சொசைட்டி, கொரோனா கட்டுப்பாட்டு மையம், புதுச்சேரி அறிவியல் இயக்கம் இணைந்து, கொரோனா விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடந்தது.

கடற்கரை சாலை நேரு சிலை அருகே, நாடக நிகழ்ச்சி மூலம் கொரோனா தொற்று பரவல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நாடகத்தில் பங்கேற்ற கலைஞர்களுக்கு, பொதுப்பணித் துறை அமைச்சர் லட்சுமிநாராயணன் சால்வை அணிவித்து பாராட்டினார். அரபிந்தோ சொசைட்டி விஜய் பொதார், அறிவியல் இயக்க அதிகாரி அமுதா, கோவிட் வார்ரூம் அதிகாரி துரைசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

வியாபாரி நீதியான பிரச்னைக்கு தீர்வு காண்பது கறிக்கோழி வியாபாரிகள் தீர்மானம்

■ கடலூரில் மாவட்ட மொத்த கறிக்கோழி வியாபாரிகள் ஒருங்கிணைப்பு கூட்டம் நடந்தது.

கடலூர், ஜூலை 27–

'மொத்த விற்பனையாளர்களுக்கு வியாபார ரீதியாக ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது' என மொத்த கறிக்கோழி வியாபாரிகள் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடலூர் மாவட்ட மொத்த கறிக்கோழி வியாபாரிகள் ஒருங்கிணைப்பு கூட்டம் கடலூரில் நடந்தது. மாவட்டத் தலைவர் அன்பு தலைமை தாங்கினார். செயலர் ரவிச்சந்திரன், பொருளாளர் முகமது பிலால், கவுரவத் தலைவர் ஷேக் பாதுர்ஷா முன்னிலை வகித்தனர்.

நிர்வாகிகள் மதியழகன், கோபி, நத்தர் அலி, அய்யப்பன், ராஜா, ராதாகிருஷ்ணன் பங்கேற்றனர். கூட்டத்தில் கடலூர், புதுச்சேரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்ட கறிக்கோழி வியாபாரிகள் பங்கேற்றனர்.

மொத்த விற்பனையாளர்களுக்கு வியாபார ரீதியாக ஏற்படும் இடர்பாடுகளுக்கு தீர்வு காண்பது. சில்லறை மற்றும் மொத்த விற்பனையாளர்களிடையே சுமூக உறவை ஏற்படுத்துவது. மொத்த விற்பனையாளர்களுக்கும் மொத்த உற்பத்தி செய்யும் கறிக்கோழி நிறுவனங்களுக்கும் இடையே ஏற்படும் குறைபாடுகளை சங்கத்தின் மூலமாக தீர்வு காண்பது. சங்கத்தை ஒற்றுமையாக வழி நடத்துவது. மாதந்தோறும் கூட்டம் நடத்துவது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

துணைத் தலைவர் பக்ரூதீன் நன்றி கூறினார்.

ஆண்பாக்கத்தில் சாகை வார்த்தல்

■ வானூர் அடுத்த ஆண்பாக்கம் கிராமத்தில் முத்துமாரியம்மன் கோவிலில் நடந்த ஆடி மாத சாகை வார்த்தல் விழாவில், அம்மன் சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்தார்.

விழுப்புரம், ஜூலை 27–

விழுப்புரம் மாவட்டம், வானூர் அடுத்த ஆண்பாக்கம் கிராமத்தில் முத்துமாரியம்மன் கோவிலில் ஆடி மாத சாகை வார்த்தல் விழா நடந்தது.

விழாவையொட்டி, நேற்று முன்தினம் முத்து மாரியம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், சந்தனக் காப்பு மற்றும் தீபாராதனை நடந்தது. பின், கோவில் வளாகத்தில் சாகை வார்த்தல் விழா நடந்தது. இதில், பொது மக்கள் சமூக இடைவெளியை கடைபிடித்து சுவாமி தரிசனம் செய்தனர்.

ஏற்பாடுகளை கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

மயங்கி விழுந்த பெண் சாவு

புதுச்சேரி, ஜூலை 27–

ஜீவானந்தபுரம் அருகே பெண் மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

ஜீவானந்தபுரம், மாரியம்மன் கோவில் வீதியை சேர்ந்தவர் சரோஜா, 53; மன நல பாதிப்புக்கு ஜிப்மரில் சிகிச்சை பெற்று வந்தார். நேற்று முன்தினம் வீட்டில் இருந்தபோது சரோஜா மயங்கி விழுந்தார். அவரை உடனடியாக ஜிப்மர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். டாக்டர் பரிசோதித்து, சரோஜா இறந்து விட்டதாக தெரிவித்தார். கோரிமேடு போலீசார் வழக்கு பதிந்து விசாரிக்கின்றனர்.

விவசாயிகள் சங்கம் கண்டன ஆர்ப்பாட்டம்

காரைக்கால், ஜூலை 27 –

காரைக்காலில் விவசாயிகள் சங்கம் சார்பில், கோரிக்கையை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

புதிய பஸ் நிலையம் அருகில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு, சங்கத் தலைவர் கலியமூர்த்தி தலைமை தாங்கினார். இந்திய கம்யூ மாவட்ட செயலாளர் மதியழகன் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில், காவிரியின் குறுக்கே கர்நாடக அரசு அணை கட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும்.

தென்பெண்ணையாற்றில் கர்நாடகம் கட்டியுள்ள யார்க்கோல் தடுப்பணையை அகற்ற வேண்டும்.

வடிகால் வாய்க்கால்களை தூர் வார வேண்டும். நிலத்தடி நீரை உறிஞ்சும் கருவேல மரங்களை அகற்ற வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

வாலிபர் தற்கொலை

புதுச்சேரி, ஜூலை 27–

கண்டாக்டர் தோட்டத்தில் டிரைவர் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

புதுச்சேரி கண்டாக்டர் தோட்டம், பிரியதர்ஷினி நகரைச் சேர்ந்தவர் சங்கரி மகன் அஜித்குமார், 24; மினிவேன் டிரைவர். திருமணமாகாதவர்.

உறவினர் வீட்டு நிகழ்ச்சிக்கு செல்ல தயாராக இருந்த தாய் சங்கரியை, வீட்டின்அருகில்உள்ளகுடியிருப்பில் விட்டுவிட்டு, வீட்டிற்கு சென்று வருகிறேன் என கூறி சென்றார்.

வெகுநேரமாகியும்அஜித்குமார் வராததால், சங்கரி வீட்டிற்கு சென்றார். உள்ளே அஜித்குமார்தூக்கில் தொங்குவதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். அவரை மீட்டு, அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். டாக்டர்கள் பரிசோதித்து, வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தனர். ஒதியஞ்சாலை போலீசார் விசாரிக்கின்றனர்.

DECLARATION

Know to all men, I, **SUBBAIYA** son of Varadarasu residing at No.5, Appasamy Street, Karuvadikuppam, Puducherry declare that my Correct Name Spelling is **"SUBBAIYA"** instead of **"SOUBBAYA"** in my Birth Certificate.

SUBBAIYA

பொது அறிவிப்பு

புதுச்சேரி-605 003, முத்தியால்பேட்டை, முத்தைய முதலியார் வீதியில், 147-ஆம் இலக்கமிட்ட இல்லத்தில் வசிக்கும் திரு.ராஜா அவர்களின் மனைவி திருமதி.R.ஜானகி ஆகிய நான் திரு.மூர்த்தி அவர்களின் மனைவி திருமதி.பத்மா அவர்களிடமிருந்து 24.08.2019 அன்று உழவர்கரை உதவிப் பதிவகத்தில் புக்-1, பத்திர எண்.11403/2019 ஆக கிரயம் பெற்ற சொத்து விபரத்தில், சக்குபந்தியில் 9-ஆம் நெம்பர் கொண்ட மனைக்கு மேற்கு என்று டைப் செய்வதற்கு பதிலாக 8-ஆம் நெம்பர் கொண்ட மனைக்கு மேற்கு என்று தவறுதலாகடைப் செய்யப்பட்டது.

மேற்கண்ட சக்குபந்தி தவறை சரி செய்வதற்காக நான் துணை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வருவாய் (வடக்கு), சாரம், புதுவையில் 16.12.2020ல் மனு செய்து மேற்படி மனு ஆய்வு செய்யப்பட்டு திருத்தல் வரைவு பத்திரம் வழங்க தயார் செய்யப்படுகின்றது. மேற்படி சக்குபந்தி தவறை சரி செய்யப்படுவதற்கு எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் பதினைந்து நாட்களுக்குள் மேற்கூறப்பட்ட அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்கிறோம் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. **D. முருகா** Agriculture Officer, Puducherry
S/o. S. தட்சிணாமூர்த்தி நாயக்கர்

கையளவு "இதயம்" கனத்து நிற்கிறது
கடல் போன்ற உங்கள் நினைவால்
என்றும் உங்கள் நினைவுகளுடன்...

மனைவி:
K. ராஜலட்சுமி
Staff Nurse (Retd.)
IGGH & PGI, Pondicherry

மகள்கள்:
M. இந்துமதி
M. ஹேமா

உறவினர்கள் மற்றும் நண்பர்கள்

ஆட்சி கவிழ்ந்தது ஏன் நாராயணசாமி திடுக் தகவல்

புதுச்சேரி, ஜூலை 27–

'புதுச்சேரியில் ஆட்சி கவிழ்ந்தற்கு, எனது மொபைல் போன் பேச்சு ஒட்டு கேட்கப்பட்டது காரணமாக இருக்கலாம்'' என முன்னாள் முதல்வர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள வீடியோ பதிவு:

பிரதமர் மோடி தலைமையிலான அரசு, மிகப் பெரிய விலை கொடுத்து, இஸ்ரேல் மென்பொருளை வாங்கி, நமது நாட்டில் பல ரது மொபைல் போன் பேச்சை ஒட்டு கேட்டுள்ளது.

நாராயணசாமி

காங்., முன்னாள் தலைவர் ராகுல், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, முன்னாள் சி.பி.ஐ. இயக்குநர், உட்பட பல அதிகாரிகள், அரசியல்வாதிகள் மொபைல் போன்கள் ஒட்டு கேட்கப்பட்ட தகவல், நாட்டை உலுக்கி கொண்டுள்ளது.

இப்பிரச்னை பார்லிமென்டிலும் வெடித்துள்ளது. நிலைக்குழு அமைத்து விசாரிக்க வேண்டும் என எதிர்க் கட்சிகள் தெரிவித்துள்ளன. 6 நாட்கள் பார்லிமென்ட் முடங்கி உள்ளது. இது குறித்து பிரதமர் கவலை கொள்ளவில்லை.

மத்திய அரசு மென்பொருளை பயன்படுத்தி, பல மாநிங்களில் ஆட்சியை கவிழ்த்துள்ளது. புதுச்சேரியில் ஆட்சி கவிழ்ப்பு சம்பவத்தில், எனது மொபைல்போன் ஒட்டு கேட்கப்பட்டிருக்கலாம் என சந்தேகப்படுகிறேன்.

மொபைலில் பேசும் போதுஎனக்குசமிக்ஞைகள் தெரிந்தது. வெளிப்படையான விசாரணை நடத்தினால், உண்மை வெளியே வரும். விவசாயிகளுக்கு விரோதமான சட்டங்களை மோடி அரசு திரும்ப பெற வேண்டும்.

புதுச்சேரியில் தற்போது குழந்தைகள் கொரோனா தொற்றுக்கு ஆளாகி வருகின்றனர். இதனை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொரோனா விதிமுறைகளை முறையாக கடைபிடிப்பது இல்லை. இதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். காந்தி வீதி சண்டே மார்க்கெட்டில் மக்கள் கூட்டம் அதிகமாக உள்ளது. இந்த அரசு மக்களைப் பற்றி கவலைப்படுவதாக தெரியவில்லை.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

புதுச்சேரி நகர அமைப்பு குழுமம்

ஜவஹர் நகர், புதுச்சேரி-605 005.

No.PPA/OBPS/2021/4155 புதுச்சேரி நாள்: 26.07.2021

பொது அறிவிப்பு

புதுவை அரசு, நிகழ்நிலை கட்டட அனுமதி முறையை 2019 நவம்பர் மாதத்தில் அறிமுகப்படுத்தியது. அது தற்போது மேம்படுத்தப்பட்டு தானியங்கி வரைபட பரிசீலனை நுட்பத்துடன் (மென்பொருள்) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது (e-DCR software). இந்த மேம்படுத்தப்பட்ட பதிப்பை மாண்புமிகு புதுச்சேரி முதலமைச்சர் அவர்கள் 28.06.2021 அன்று துவக்கி வைத்தார். இந்த மேம்படுத்தப்பட்ட பதிப்பானது சாதாரண 2 மாடி குடியிருப்பு கட்டடங்கள் (தரை + 1 அடுக்கு) & இரண்டு குடியிருப்புகள் வரை உள்ள வரைபடங்களை தானே பரிசீலிக்கும் வசதி கொண்டது.

இனிமேல், இரண்டு அடுக்கு வீடுகள் மற்றும் இரண்டு குடியிருப்புகள் வரை கட்ட விரும்பும் பொதுமக்கள் தங்களது விண்ணப்பத்தினை, நிகழ்நிலை முறையில் நகரஅமைப்பு குழுமத்தில் பதிவு பெற்றுள்ள தொழில்நுட்ப பொறியாளர்கள் மூலம், சம்மந்தப்பட்ட ஆவணங்களுடன், புதுவை கட்டட சட்ட திட்டங்கள் மற்றும் மண்டல வரையறைகள் 2012 மற்றும் https://obps.py.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றப்பட்ட வழிகாட்டுதல்களை பின்பற்றி தயாரிக்கப்பட்ட கட்டட வரைபடங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த மேம்படுத்தப்பட்ட முறையில், சமர்ப்பிக்கப்படும் கட்டட வரைபடமானது, புதுவை கட்டட சட்டதிட்டங்கள் மற்றும் மண்டல வரையறைகள் 2012, மற்றும் e-DCR மென்பொருள் முறையில் கட்டட வரைபடம் தயாரிக்கும் வழிமுறைகள் ஆகியவற்றிற்கு பொருத்தமாய் இருப்பின் விண்ணப்பம் பெற்றுக்கொண்டதகவல் உருவாக்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தின் நிலையை மின்னஞ்சல், குறுஞ்செய்தி மூலமும் தெரிந்து கொள்ளலாம். மேலும் கட்டட அனுமதியை நிகழ்நிலை முறையில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கட்டட வரைபட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பிக்கும் செயல்முறை, வரைபடம் தயாரிக்கும் வழிகாட்டல் மற்றும் பிற அம்சங்களை மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் காணலாம்.

01.09.2021 முதல் நிகழ்நிலை முறையில் இரண்டு அடுக்கு மற்றும் இரண்டு குடியிருப்புகள் வரை உள்ள வீடுகளுக்கு கட்டட அனுமதி விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறையானது கட்டாயமாகிறது மற்றும் தாள் (கடின) நகல்கள் எதுவும் புதுவை நகர அமைப்பு குழுமத்தால் பெறப்படமாட்டாது என்பதனை இந்த அறிவிப்பு மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

(வீ.புவனேஸ்வரன்)
உறுப்பினர் செயலர்.

No.086/DIP/AD(Press)/2021-22

தினமலர் வரி

ஆட்கள் தேவை

Looking for experienced granite and marble block and slab markers in Bangalore and Hosur area.Applicants can email their CV and contact -info@alkarastones.com or whatsapp 9110417014

ஹோம் கோ

டிரைனிங்நர்ஸ்,ஹோம்நர்ஸ் அட்டெண்டர் தேவைக்கு ஜெய்ஸ்ரீஓம்சக்திஹோம்கோ கோவை (நர்ஸ்கள் தேவை) 9043711116, 9043799991, 9043377772, 9043722226

மணமகன் தேவை

வ21-55, 10th/Deg சுத்த/தோசமுள்ள பெண்களுக்கு மணமகன்கள் தேவை முதல்/மறுமணம் 8608733444

வ21-60, 10th/+2/Dip,Deg, பிராமண பெண்களுக்கு ஐயர்,ஐயங்கார்,குருக்கள் மணமகன்கள் தேவை தீபம் 7708875444

ரம்யா வயது:23, 10th சொந்தவீடு/ஆதரவற்ற பெண்ணுக்கு மணமகன் தேவை 9003461823

வைதேகி 43 சொந்தவீடு, துணிகடை, 70000 வருமானம் வீட்டோட மாப்பிள்ளைதேவை 9789682671

மணமகன் தேவை

உஷா 35 சொந்தவீடு எதிர்பார்ப்பு இல்லை, மறுமணம் சம்மதம் நல்ல மணமகன் தேவை 9791397163

திருமணம்

மாமியார் வீடு திருமண சேவை மையம் முதல் மணம், மறுமணம், ஆண்களுக்கு பதிவு ரூ 600, பெண்களுக்கு பதிவு இலவசம் 8883255600, maamiyarveedumatrimony.com , 9944403099

அனைத்து ஜாதி ஆண், பெண் முதல் மற்றும் மறுமணம் ஜாதகங்கள் உள்ளன. (மத்திய, மாநில தனியார் பணியில் உள்ள வரன்கள் உள்ளன). முல்லை மேட்ரிமோனி, தேனி. செல்: 9443008989